# ஆண்டின் பொதுக்காலம் 33ஆம் வாரம்

## திருவழிப்பாட்டு ஆண்டு C (17-11-2013)

### திருப்பலி முன்னுரை:

**ஆண்டின் பொதுக்காலம் 33ஆம் வாரத்**தில் இறை வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் இறைமக்கள் அனைவருக்கும் என் எளிமையான வாழ்த்தைப் பகிர்ந்துகொள்கிறேன். வழிபாட்டு ஆண்டின் இறுதி நாட்களை நெறுங்கிக் கொண்டிருக்கிறோம். மீட்பும், விடுதலையும் தரும் இயேசுவின் பிரசன்னத்தில் விசுவாசத்தோடும், வேண்டுதல்களோடும் ஒன்று கூடியுள்ளோம். நம் மீட்பராக மண்ணகம் வந்து நம்மை மீட்கும் பணியை முழுமையாக்கிச் சென்றவர் மீண்டும் வருவேன் என்றதை இந்த நாளில் திருச்சபை நினைவுகூர்கின்றது. அவர் வர இருக்கிறார். எனவே அணியமாகிக்கொள்க எனும் அழைப்பும் நினைவூட்டலும் இன்று நமக்கு விடுக்கப்படுகிறது. இன்றைய நற்செய்தியில், இயேசு, ”ஒரு நாள் வரும், அப்போது கற்கள் ஒன்றின் மேல் ஒன்று இராதபடி இவையெல்லாம் இடிக்கப்படும்” என்று கூறி இவ்வுலகில் உள்ளதெல்லாம் தற்காலிகமானது தான். நமக்குஅறிவுறுத்துகிறார்.

ஆண்டவர் உலகுக்கு நீதி வழங்க வருகின்றார் என்றும்: அவர் பூவுலகை நீதியுடன் ஆண்டிடுவார் என்றும்: மக்களினங்களை நேர்மையுடன் ஆட்சி செய்வார் என்றும் இன்றைய இறைவார்த்தைகள் வழியாக நமக்குக் கூறப்படுவதோடு, நம்மைத் தலைநிமிர்ந்து நிற்கும்படியும் ஏனெனில் நமது மீட்பு நெருங்கி வருகின்றது என்னும் எச்சரிக்கையும் விடுக்கப்படுகின்றது. நாம் வாழ்வு பெற ஆண்டவர் நமக்கு வழங்கும் இந்த நல்ல செய்திக்காகவும், தீமையிலிருந்து நம்மைக் காக்க கொண்டிருக்கும் கரிசனைக்காகவும் இவ்வேளையில் அவருக்கு நன்றி சொல்லுவோம். ஆண்டவர் முன்னிலையில் மகிழ்ந்து பாடுவோம். ஆண்டவரைப் புகழ்தேத்துவோம், அவரை வாழ்த்திப் பாடுவோம். இறையருள் கேட்டுத் தொடரும் திருப்பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**கைம்மாறு அளிப்பவரே இறைவா,**

உமது பணிக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்துள்ள எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது முன் தாழ்ச்சி உள்ளவர்களாக வாழ்ந்து, மக்களுக்கு பெருந்தன்மையுடன் தொண்டாற்றும் வரமருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**நிறைவாழ்வு தரும் ஊற்றான இயேசுவே,**

உம்மைப் போற்றுகிறேன். வியத்தகு செயல்களை வான்வெளியிலும், இயற்கையிலும் காணும நான், உம்மை வியப்புக்குரியவர் எனப்போற்றுகிறேன். அருங்குறிகளைத் தேடி ஓடாமல், ஏமாறாதபடி விழிப்பாயிருக்கும் அருளை எனக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!**

எமது விசுவாச வாழ்விற்கெதிராக பல சக்திகள் எம்மைக் குழப்பும் இந்நாட்களில், நாங்கள் ஏமாறாதவாறு எங்கள் விசவாச வாழ்வைக் காத்துக் கொள்ளவும், போர் முழக்கங்களையும் குழப்பங்களையும்பற்றிக் கேள்விப்படும்போது திகிலுறாதிருக்கவும்: மன உறுதியோடு இருந்து எங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளவும். வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

எமது இளைஞர்கள் அனைவரும் உமது அன்பையும், கரிசனையையும் ஆழமாக உணர்ந்து, உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“நீர் இன்றே என்னோடு பேரின்ப வான் வீட்டில் இருப்பீர்” அன்பு தந்தையே!**

இதோ இந்த தருணத்தில் இறந்துபோன ஒவ்வொரு ஆன்மாவிற்காகவும் அதிலும் குறிப்பாக யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக உம்மிடம் வேண்டுகிறோம். இவர்கள் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னித்து உம் வான்வீட்டில் உம்மை முகமுகமாக தரிசிக்கும் வரத்தை பொழிந்தருள இறைவா உம்மை பார்த்து மன்றாடுகிறோம்.

**ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுளே இறைவா!**

உம் மக்களாகிய நாம் அனைவரும் விசுவாச வாழ்வில் உறுதியாகவும், பிரமாணிக்கமாகவும் இருந்து செயற்படவும், இறைவார்த்தையின் ஒளியில் நிறை வாழ்வை நோக்கிப் பயணிக்கவும் வேண்டிய சக்தியையும், அருளையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

**"ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் மகன் குணமடைவான;" தாயும் தந்தையுமானவரே!**

உம் சந்நிதானத்தில் உம் பிள்ளைகளாகிய நாங்கள் பல்வேறு தேவைகள் நிறைவேற வேண்டி நிற்கிறோம் ஆண்டவரே. நாங்கள் எப்போதும் உம் அளவற்ற அன்பை சுவைக்கவும் அதனை பிறருக்கு அளிக்கவும் வேண்டிய தாராள மனதை தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.